| மாவட்டம். | நிலத்தின் அளவு. |
|---|---|
| (1) | (2) |
| (7) கோயம்புத்தூர் | 6,988 |
| (8) சேலம் | 538 |
| (9) தர்மபுரி | 1,023 |
| (10) மதுரை | 9,945 |
| (11) இராமநாதபுரம் | 7,633 |
| (12) திருநெல்வேலி<br>(13) கன்னியாகுமரி | 13,984 |
| | 87,586 |

அரிசனங்களுக்கு இலவச வீடுகள்.

வினா 400— திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு உரிய தொகையைக் கொடுத்து அரிசனங்கள் தாங்களாவே வீடு கட்டிக்கொள்ள அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை:

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ், வீடுகள் கட்டுவதற்கு உரிய தொகையைக் கொடுத்து அரிசனங்கள் தாங்களாகவே வீடுகட்டிக்கொள்ள அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 10-00]

## (2) ஒழுங்குப் பிரச்சினைகள்.

### (அ) வானொலியில் பேரவை நிகழ்ச்சிபற்றித் தவறாக அறிவிக்கப்பெற்றது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, இன்று காலை வானொலியில் $6\frac{1}{2}$ மணி செய்தியில் தொழிலாளர்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஓட்டெடுப்பின் மூலம் தோல்வியுற்றது என்று அறிவித்தார்கள். ஆனால் ஓட்டெடுப்பு நடைபெறவில்லை; அவர்களே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அப்படி இருக்கும்போது..

திரு. சி. ஆறுமுகம்: உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லுகிறார்கள். தீர்மானம் திரும்பப் பெறப்படவில்லை. குரல் ஓட்டு மூலம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓட்டெடுப்பு என்றால் 'வாய்ஸ் ஓட்' கூடச் சொல்லலாம். ஓட்டெடுப்புக்கு விட்டால் தான் ஓட்டெடுப்பு என்று சொல்லவேண்டுமென்றில்லை; வாய்ஸ் ஓட்டையும் சொல்லலாம். ஆகவே, அதில் தவறு ஒன்றும் இல்லை.

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே ஏதோ பேசினார்.)

உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம், ஏதாவது சொல்லவேண்டுமென்றால் என்னுடைய அனுமதியைப்பெற்று சொல்ல வேண்டும். சும்மா உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாம்.

## (ஆ) உடுக்குறியிட்ட வினாக்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப்பெற்றுப் பதிலளிக்கப்பெற வேண்டுமென்பது குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, தினந்தோறும் 25 கேள்விகளைப் போட்டு, 19 அல்லது 20 கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கப்படுகிறது; மீதியை அச்சிட்டுத் தருவதாகச் சொல்கிறீர்கள். அப்படி அச்சிட்டும் எங்களுக்குத் தரப்படவில்லை. அச்சிட்டுத் தந்தாலும் எங்களுக்கு அதில் கஷ்டம் இருக்கிறது. ஏனென்றால் அதற்கான துணை வினாக்கள் கேட்டு, தகுந்த விளக்கம் பெற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால் 20 கேள்விகளை மட்டும் போட்டு, அவைகளுக்குக்கான பதில்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற ஏற்பாடு செய்யுங்கள். இல்லை என்றால், 25 கேள்விகள் போடுவதாக இருந்தால், துணை வினாக்களை சுருக்கி, எல்லாக் கேள்விகளுக்கும் அவையிலே பதில் அளிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிக மிக வரவேற்கத்தக்க ஒன்று. நிறைய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டியிருக்கிறது. தினந்தோறும் 20 கேள்விகள் என்று எடுத்துக் கொண்டால் பதில் வந்திருக்கிற கேள்விகள் தேங்கிவிடும். அதனால் 25 கேள்விகளை எடுத்துக்கொள்கிறோம். இப்போதுகூட 'நாங்கள் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறோம், எங்களுக்கு சான்ஸ் கொடுக்கவில்லை' என்று இரண்டு உறுப்பினர்கள், அவர்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறை சொன்னார்கள், அப்போது நீங்களும் கேட்டுக் கொண்டுதான் இருந்தீர்கள். உறுப்பினர்கள்